உ

சிவமயம்.

ஜெயங்கொண்டார் சதகம்.

இது
மதுரைச்சீமை சிவகங்கை சமஸ்தானம்
கீழைச்சேவற்பட்டு
இளையாற்றங்குடி. எழுநகரமென்று சொல்லப்பட்ட
நேமநகரத்திலுதித்த
அழகப்பசேட்டியார் குமாரர்
முத்தப்பசெட்டியார் அவர்கள்
இயற்றியது.

மேற்படியார் பௌத்திரர்
நாராயணஞ் செட்டியார்
கேட்டுக்கொண்டபடி பதிப்பித்த பிரதிக்கிணங்க

சென்னை:
மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.
1913.

விலை அணா 2.

உ

சிவமயம்.

ஜெயங்கொண்டார் சதகம்.

காப்பு.

விநாயகர்துதி.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்பொருந்துந் தென்னைமச் செயங்கொண்ட சோழீசர்
திருப்பேர் வாழ்த்திப்
பார்பொருந்துங் குறுவிருத்தப் பாமாலை தனிலுலகப்
பழமைச் சொல்லை
யேர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப் புவியிலுள்ளோ
ரிசைந்து கேட்கக்
கார்பொருந்துந் துதிக்கரத்தான் வெயிலுகந்த கணபதிதாள்
காப்புத் தானே. (க)

முருகர்துதி.

நகரமெல்லாம் பணிந்தேத்துஞ் செயங்கொண்ட சோழீச
நாயனார்மேன்
மகரநெடுங் கடலுலக வதந்தியைச்செந் தமிழால்யான்
வழுத்து தற்கே
யகரமுத லவ்வெழுத்தென் றாதியின்முப் பாற்சொன்ன
வவன்றாள் போற்றிச்

சிகரவரை மீதெழுந்த சிறந்தவடி வேலவன்றாள்
சென்னி சேர்ப்பாம். (௨)

கலைவாணிதுதி.

சிலைவேளை வென்றபிரான் றென்னேம நகரில்வளர்
செயங்கொண் டார்மே [லே
னுலகிலுள்ளோர் வழக்கமதாய்ச் சொன்னசொல்லைத் தமிழா
யுரைப்ப தற்குக்
கலைவாணி யாகியுல குள்ளமட்டும் படிக்கவந்த
கவிதை தன்னின்
மலர்வேதன் மனைவியென்றன் மனத்திலிருந் திவ்வுரையை
வழுத்து வாளே, (௩)

அவையடக்கம்.

பத்தருளத் தினிற்சூரி தண்டலையென் றெமக்குரைத்த
பரமர் மீதில்
வித்தகர்முன் னுலகவழக் கத்தையெடுத் தொருநூறு
விருத்தஞ் செய்தா
ரத்தைநிக ரெனச்செயங்கொண் டார்மீதின் முத்தையன்சிற்
றறிவி னாலே
மத்தகயந் தனக்குமுன்னே சிற்றெறும்பு நடந்ததென
வசனித் தேனே. (௪)

பாயிரம் முற்றிற்று.

நூல்.

வான்மீகர் கதை.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நல்வேட வான்மீகர் சப்தரிஷி களைச்சேர்ந்த
    ராம மந்த்ரஞ்
சொல்லநா வில்லாது கற்றறியா மையின்மரா
    வெனமுன் சொன்னார்   [டார்
வில்விசயன் றெவ்வைவெல்லக் கணைகொடுத்த செயங்கொண்
    விளங்கு நாட்டிற்
கல்வித்னக் கழகுகச டறமொழித லெனமுன்னோர்
    கழறு வாரே.   (க)

மார்க்கண்டர் கதை.

அருமறைமார்க் கண்டர்சித்தந் திருக்கடவூர் வேணியனை
    யன்பாய்ப் பற்றி
வரு * சமன்றன் பகையடக்கித் தீர்க்காயு ளாய்ப்புவியில்
    வளரா நின்றார்
தருவைநிகா தென்னைமை நகரில்வளர் செயங்கொண்டார்
    தமிழ்சேர் நாட்டிற்
பெருமரத்தைச் சுற்றிநின்ற வல்லியுஞ்சா காதெனவே
    பேசு வாரே.   (உ)

பாண்டவர்கள் கதை.

அருமைசெறி பாண்டவர்கள் பங்காளி செய்கொடுமை
    யாற்கா டாண்டு
முரிமையுடன் றருமர்செய்த நன்றியினாற் றிரும்பவும்வந்
    துலகை யாண்டார்

---

* சமன்-எமன்.

பருவரைவில் லாவளித்த செயங்கொண்டா ரேயெவரும்
பண்பாய்ச் செய்த
தருமமே தலைகாக்கு மதர்மமழித் திடுமெனவுஞ்
சாற்று வாரே. (௩).

இளையான்குடிமாறர் கதை.

உழுதிளையான் குடிமாறர் முளைவாரி யன்னமன்பர்க்
குதவிப் பாரில்
வழுவாத கீர்த்தியுட னொருநாளுங் கேடில்லா
வாழ்வு பெற்றார்
மழுவேந்துங் கரதலத்தார் செயங்கொண்டார் வளநாட்டின்
மறைக ளோதித்
தொழுவாரெல் லாமுழுவார் தலைக்கடையி லென்றுலகஞ்
சொல்லு மாதோ. (௪)

கிரவுஞ்சம்பிளவுபட்ட கதை.

தஞ்சமெனச் சரண்புகுந்த வமரர்களைப் புரப்பதற்காச்
சரவ ணத்தின்
மஞ்சனெனத் தோன்றியவேள் வடிவேலாற் கிரவுஞ்ச
மாய்ந்த தன்றோ
செஞ்சரணத் தால்யமனை வென்றசெயங் கொண்டாரே
தேவ ரேனும்
வஞ்சநெஞ்சைப் பிளக்குமிது பொய்யல்ல வுலகினிச
வசனந் தானே. (௫)

இராமர் கதை.

அரியோனைக் கௌசிகன்பால் விடமலைத்தான் றசரதன்விட்
டதற் கிலாபங்
கரியோன்று னதிகசௌந் தரியனுக்குந் தனுவினுக்குங்
கமலத் தார்க்கு

முரியோனு கியமறைதேர் முனியன்றோ செயங்கொண்டா
ருலகந் தன்னிற் [ன்றும்
பெரியோரைத் துணைக்கொளென்ற வௌவைவாக்கியத்திலொ
பிசகி ராதே. (௬)

இராமர் வனவாசஞ்சென்ற கதை.

* பானுகுல ராமனுக்குப் பட்டாபி ஷேகமெனப்
பகர்ந்த போது
கூனியொரு சூத்திரத்தைக் கொடுக்கவவ னூரைவிட்ட
கொள்கை போல
மானணியுங் காத்தாரே செயங்கொண்டா ரேபுவியின்
மகிமை சேர்ந்த
யானைநிழல் பார்க்கையிலே தவளைவந்து கலக்கிவிடு
மதுமெய் தானே. (௭)

இராவணன் கதை.

† தொடைக்கிலங்கு மார்பனிலக் குமணன்வில் வலுவென்றான்
சொன்ன பேச்சை
யடக்கிரா வணனுனை யோரம்பா னுன்வெல்வே
னறியென் றூற்போற்
சடைக்கிதழி மாலையணி செயங்கொண்டா ரேயெதிரி
தளத்துக் கஞ்சிப்
படைக்குப்போ காதவர்கள் நல்லசே வகரெனவும்
பகருவாரே. (அ)

வாலி சுக்கிரீபர் கதை.

பேரிலுயர் வாலிசுக்கி ரீபரிரு வருபம்பகைபாய்ப்
பிரிய ராமர்

---

* பானு - சூரியன். † தொடை - மாலை.

காரியத்துக் காகவந்து கடலடைத்துச் சிறைமீட்ட
கணக்குப் போலே
மேருவைவில் லாய்வளைத்த செயங்கொண்டா ரேயுலகில்
விளங்குஞ் சொல்லு
மூரிரண்டு பட்டதென்றூற் கூத்தாடிக் கேலாப்
முண்டென் பாரே. (கூ)

மூதேவி சீதேவி பிறந்த கதை.

* செல்லோடே யிணங்குகடற் றிருவுடன்மூத் தாள்பிறந்த
செய்தி பாரி
னல்லோடைச் சலத்தில்சில பாசிபடர்ந் திடனுந்த
னஞ்ச யன்கை
வில்லோடே மோதியதோட் செயங்கொண்டா ரேவயலில்
விளைவுண் டான
நெல்லோடே பதருமசந் தனிலதரும் பிறந்திருக்கு
நேர்மை தானே. (க0)

சரஸ்வதி கம்பரை நீங்கிய கதை.

நங்கைகலை வாணிகம்ப ரிடத்திருக்கத் தண்டிகையி
னலமாய் வாழ்ந்தா
ரங்கவடான் புறம்போகக் கம்பரன்றே கூலிக்கோ
ராளா னுரே
செங்கையுகி ராலவேதன் சிரத்திலொன்றைத் துணித்துவிட்ட
செயங்கொண் டாரே
சங்கமா றியபோது சுண்ணும்புங் கொடுக்கார்தொல்
புவியு ளோரே. (கக)

வாமனன் அரிச்சந்திரன் கதை.

† தாப்பாய்வா மனன்கையின் மாவலிதண் ணீரைவிட்டுத்
தாணி தோற்றுன்

---

* செல் - மேகம். † தாப்பு - சமயம்; குறித்த நேரம்.

வாய்ப்பாய கோசிகன்றன் வஞ்சனையா லரிச்சந்த்ரன்
மனைவி விற்முன்
றீப்போலே விழிகாட்டி மதனுடலை யெரித்துவிட்டு
செயங்கொண் டாரே
பார்ப்பார்க்கு வாய்ப்போக்கொண் ணுதாண்டிக் கதுதானும்
பகரொ ணுதே. (கஉ)

திருஞானசம்பந்த சுவாமிகள் கதை.

பண்ணூருங் கவுணியர்வி பூதியினல் வழுதிசுரம்
பாதி தீர்த்தா
ரெண்ணுயி ரஞ்சமணர் திருநீற்றை மறந்துகழு
வேறி மாய்ந்தார்
பெண்ணுளைச் சடையில்வைத்த செயங்கொண்டா ரேயுலகிற்
பெருமை சேர்ந்த
வெண்ணீறே வினையகற்றுந் தரிப்பவர்க்குச் சிவகதியு
மேவுந் தானே. (கந)

துரியோதனன் கதை.

புள்ளாலே பொறியாவத் துசன்மடிந்தாற் றருமருக்குப்
பொரும்போ ருண்டோ
துள்ளாடத் திருப்பிவிட்டுப் பின்பவனைச் செயிக்கமிகத்
தொல்லை யாச்சே
வெள்ளானைக் கிறைபணியுஞ் செயங்கொண்டா ரேபகையை
மெலிவி யாமன்
முள்ளாலே யெடுப்பதைக்கோ டாலியா லெடுக்கவந்த
முறைமை யாமே. (கச)

அகலிகை கதை.

பண்டகலி கையையிந்தி ரன்கள்ளவாய்த் தழுவிவெளிப்
படுஞ்சா லத்தைக்

கண்டுமுனி சகியாம லிருவரையுஞ் சபித்ததனுற்
கனவீ னந்தா
னிண்டைபுனை சடையாரே செயங்கொண்டா ரேபுவியி
லில்லாள் பேச்சைக்
கொண்டவன்றாற் றம்போதே கூரையொக்கத் தூற்றுமெனக்
கூறு வாரே. (கரு)

தாரை கதை.

கடலீன்ற சந்திரனைக் குருமனைவி கலந்தணையக்
கருதி வாவென்
றிடவுமதி தொடலாமோ பின்வருவ தறியாம
லிணங்கி னுனே
சடையிலங்கக் கங்கையணி செயங்கொண்டா ரேமாரன்
சரந்தாங் காம
லுடைகுலைந்த பின்புசொந்த முறைமைகள்கொண் டாடுவரோ
வுலகு ளோரே. (கசு)

காந்தக்கற்கோட்டை யழிந்த கதை.

சுற்றுமதிற் கலிங்கசிந்து சூழூசிக் காந்தமேனுந்
துருவந் தன்னை
யெத்தும்விலை மாதர்களாற் பண்டகரு ணுகரன்வென்
றிட்டா னன்றே
சைத்திகிரி யோன்பணியுஞ் செயங்கொண்டா ரேமிகுந்த
கருத்துண் டான
புத்திமான் பலவானு மென்றுலகோர் சொல்லுவதும்
பொருந்துந் தானே. (கஎ)

தருமர் கதை.

ஆனைப்போல் வருமிருகந் தனக்கும்வீ மனுக்கும்வழக்
கான நியாய

வேளைக்கா தாவுதர்மர் வீமனுடல் பாதிமிரு
கத்துக் கென்றார்
வேழப்போர் வையைத்தரித்த செயங்கொண்டா ரேசினி
வெல்லம் போட்டு
நாழிப்பால் வார்த்தா லு நடுச்சொல்வா ரறிவுமிகு
நடுவுள் ளோரே. (கஅ)

வாலி மறுசனன மேடுத்த கதை.

விழியெதிர்நில் லாதொளித்து வாலியைமா லெய்துகொன்று
விடவே வாலி
வழியுடனே மறுசனன மெடுத்தரியை யெய்துபழி
வாங்கி னானே
அழலுமழு வணிகாத்தார் செயங்கொண்டார் நன்னாட்டி
லமரர்க் கேனும்
பழிகிழம தர்கிவிட்டுப் போவதில்லை யென்றுலகோர்
பகரு வரே. (கசு)

அம்பிகாபதி கதை.

அரசன்மக ளாரையம்பி காபதிசேர்ந் ததனைமன்ன
னறிந்து நாட்சென்
றுருசிபிறந் தொருநாளத் தாட்சியுட னவனுயிரை
யொழித்தா னன்றோ
பாசணியுங் காத்தாரே செயங்கொண்டா ரேமிகுந்த
பழக்க மேனுஞ்
சாசமிஞ்சி ரவிக்கையிற்கை போடவொண்ணா தென்றுலகோர்
சாற்று வாரே. (உ0)

விபீஷணன் கதை.

கும்பகர்ன னுக்கிளையோன் றமையனுயிர் நிலைகாட்டிக்
கொல்லென் றேகி

கும்பலைக்குத் துறவுசொல்லி யிலங்கைமன்னன் வனுவைமுற் [றுங்
குறைத்தா னன்றோ
செம்பிரன்னுட் டவர்புகழுந் தென்னேம நாட்டில்வளர்
செயங்கொண் டாரே
தம்பிபிறக் கத்தரையா மென்றிடுஞ்சொல் லரக்கனுக்கே
தகுங்கண் டீரே. (உக)

கண்ணன் மலையைக் குடையாக எடுத்த கதை.

கல்லான மாரியையின் திரனனுப்ப வாய்ப்பாடிக்
கண்ணர்க் கம்பு
வில்லேது மின்றியொரு கற்குடையால் வந்தமழை
விலக்கி னரே
செல்லாருங் குழலிசௌந் தரியையிடப் பாகம்வைத்த
செயங்கொண் டாரே
வல்லார்க்குப் புல்லுமோ ராயுதமா மென்றுலகோர்
வழங்கு வாரே. (உஉ)

சூர்ப்பநகை மூக்குமுலை யறுபட்ட கதை.

* உறுக்குதலு நயத்தலுமார் சூர்ப்பநகை யிலக்குமண
னுயர்தோள் சேரச்
சுறுக்கிற்சென் றெடுக்கவவ னிணங்காமன் மூக்குமுலை
துணித்தா னன்றோ
† மறிக்கிசைந்த கரத்தாரே செயங்கொண்டா ரேமிருந்த
மயலுண் டாகிச்
சிறுக்கிமன தறியாமற் செடிதனைக்கை யாற்றாக்கித்
திரிந்த வாறே. (உ௩)

சீதை கதை.

தேன்மொழிச்சீ தையையரக்கன் சிறையெடுத்து வனத்தில் [வைத்த
செயலா லுந்தா

* உறுக்குதல்-கோபித்தல். † மறி-மான்.

ஞனமட்டும் பார்க்கவவள் கற்பழியா தக்கினியி
லமிழ்ந்து மீண்டாள்
மான்விழியாள் சௌந்தரிபா காசெயங்கொண் டாரேநின்
வளஞ்சேர் நாட்டிற்
முன்பதிவி ரதையானுற் றேவடியாள் வீட்டினித்தந்
தரிக்க லாமே. (உச)

அருச்சுனன் கதை.

பண்டுகிணற் றினிலெறிந்த பௌத்திரத்தைத் துரோணர்சிலை
பாணம் போட்டுக்
கொண்டுவரக் கண்டதனஞ் சயனுமந்த விற்றொழில்கைக்
கொண்டா னன்றோ
வண்டுவிழி யுமைபாகா செயங்கொண்டா ரேயுமது
வளஞ்சேர் நாட்டில்
கண்டதைக்கற் கின்றவனே பண்டிதனு வானென்றே
கருது வாரே. (உரு)

நளனைப் பாம்பு கடித்த கதை.

நண்ணு * கழை வனமெரிய மேற்கிடந்த பாம்புசெத்தி
டாமற் றூங்கி
மண்ணில்விட நளன்காத்தி லாவுகடித் தவனுடலை
வடுச்செய் தாற்போல் [யின்
வெண்ணிலவைச் சடையில்வைத்த செயங்கொண்டா ரேகுடி
மெலிவு தீரப்
புண்ணியத்துக் குழமெருதைப் பல்பிடித்துப் பார்ப்பரெனப்
புகலு வாரே. (உசா)

ஓரரசன் பெண்சாதியின் கதை.

நயவேந்தன் பாரியொரு துன்மார்க்க னுசைகொண்டு
நடந்தே யாற்றி

---

* கழை - மூங்கில்.

வியல்புடனே போய்ச்சலத்தி னின்றதைச்சிந் தாமணியி
வியம்பி னாரே.
கயல்விழியா ளுமைபாகா செயங்கொண்டா ரேதனது
கணவன் போலே
அயல்வீட்டான் மகனவனு மாபத்துக் குதவானென்
றறைகு வாரே. (உஎ)

சேதுபதிராசா மகள் கதை.

பெண்ணைவாழ்க் கைப்படுத்தச் சேதுமன்னன் குறித்தவிடம்
பிசகி மேலாங்
கண்ணர்பரி சோதனைக்குந் தப்பிவிதிப் படிமுடவன்
கைக்கொண் டானே
பண்ணுலவு புகழ்மேவுஞ் செயங்கொண்டா ரேமூவர்
பாரித் தாலு [பவர்க
மெண்ணெய்தனைத் துடைத்திடலா மெழுத்ததனைத் துடைப்
பில்லைத் தானே. (உஅ)

குஷ்டரோகியின் கதை.

பண்டுகுட்ட ரோகியுந்தான் பாரதங்கேட் டார்நோயும்
பஞ்சா யோடி
விண்டுவரு கையிற்கதையைப் பொய்யென்றான் மறைந்தகுட்ட
மீறிற் றன்றோ
தண்டமிழுக் கருள்புரியுஞ் செயங்கொண்டா ரேபூதந்
தழும்பா தீசன்
உண்டென்ற பேருக்குண் டில்லையென்ற பேர்க்கில்லை
யுண்மை தானே. (உகூ)

மனுநீதிச்சோழன் கதை.

முன்னொருசோ ழன்புதல்வன் றேர்க்காலி லான்கன்று
முறியக் கண்டே

பின்னதற்கி டாய்த்தனது பிள்ளையைத்தேர்க் காலிவிட்டுப்
பெருமை சேர்ந்தான்
றென்னேம நகரில்வாழ் சௌந்தரநா யகிமகிழ்ந்த
செயங்கொண் டாரே
தன்னுயிர்போன் மன்னுயிரை யெண்ணுவர்தே வர்முனிவர்
தமக்கொப் பாரே. (௩௦)

இந்திரசித்தன் கதை.

கண்ணர்படை தனைச்செயிக்க விந்த்ரசித்த னிகும்பலையைக்
கருதிச் செய்தே
நண்ணியயா கமுமுடியுந் தருணத்தி லிலக்குமண
னுசஞ் செய்தான்
மண்ணையுண்டோன் விழிபதத்தார் செயங்கொண்டா ரேகோல
மத்தூ டாடி
வெண்ணெய்படும் வேளையிலே தாழியுடைந் திடுதன்முன்செய்
வினையென் பாரே. (௩௧)

இராவணன் கதை.

அற்புதரா மன்கைவலு முதனுட்சண் டையிலரக்க
னறிந்தும் புத்தி
சொற்பமகோ தரன்பேச்சைக் கேட்டலவோ குலத்தோடுந்
துஞ்சி னானே
தற்பரச தாசிவனே செயங்கொண்டா ரேநல்யோ
சனையில் லாத
துற்புத்தி மந்திரியா லரசுக்கே யீனமென்ற
சொல்மெய் தானே. (௩௨)

சகரர்கள் கதை.

ஆவலாய்ப் பரிதேடிக் கபிலரிஷி யிடத்திற்போ
யகம்பா ராட்டித்

தாவியவெஞ் சினத்தாலே யறுபதினு யிரம்பேர்கள்
சக்ராண் மாண்டார்
காவடருந் தென்னேமச் செய்ங்கொண்டா ரேபொறுமை
கருதிச் செய்யாக்
கோபமே பெரும்பாவ மதுசண்டா ளம்மெனவுங்
கூறு வாரே. (௩௩)

இராக்கதன் கதை.

ஆற்றையணி தேநோக்கி யொருநிருதன் றவசுசெய்ய
வவனுக் கோர்வாள்
கூற்றையுந்தத் தோனனுப்பக் குறுக்கிற்சென் றிலக்குமணன்
கொண்டா னன்றோ
நாற்றிசையும் பணியவருஞ் செயங்கொண்டா ரேயனந்த
நாளா யொட்டிக் [ண்ட
காத்திருந்தோன் பெண்டுதனை நேற்றுவந்தோன் கைக்கொ
கணக்குத் தானே. (௩௪)

பாரதக்கதை.

விதுரன்வின் முரித்தான்கன் னனும்பாம்புக் கணை திரும்ப
விட்டா னில்லை
யெதிரிபடை தனைத்துரியோ தனன்செயிக்கப் படைத்தலைவ
ரிணங்கி னுரே
மதுரையி * லிந் தனம்விலையல் விற்றசெயங் கொண்டாரே
மருவார் போரில்
குதிரைநட வாவிடின்மா வீரர்பறந் திடுவரோ
கொக்காய்த் தாமே. (௩௫)

மணியடித்தகதை.

சாத்திரவே தியர்வதிட்டர் தருமாது சத்திரத்திற்
சலச்சோ றுண்ட

---

* இந்தனம் - விறகு.

மாத்திரமே லட்சமறை யோர்புசித்தா லரடுமேணி
மலிந்தா டிற்றே
நேத்திரத்தா லனங்கனுட றனையெரித்த செயங்கொண்டார்
நிமலர் நாட்டிற்
பாத்திரத்தை யறிந்துபிச்சை யிடவேண்டு மென்றுலகோர்
பகரு வாரே. (கசு)

கிருட்டினன் தருமரைப் போய்சோல்வித்த கதை.

அன்பான தருமரசு வத்தாமா வெனும்யானை
யமரில் வீழ
வன்பான புயவசுவத் தாமர்பட்டா ரெனப்பிசகி
வழுத்த லாச்சே
முன்பாத வன்னெயிற்றைப் பறித்தெறிந்த ஜெயங்கொண்டார்
முதல்வர் நாட்டிற்
றன்பானை தனைச்சாயப் பிடிப்பதுண்டோ வெவருமென்று
சாற்று வாரே. (கஎ)

பஞ்சபாண்டவர்கள் போர்க்குச்சென்ற கதை.

மன்னர்துரோ ணரையோனுன் கொடுபோயிற் றென்றொரு
வழுத்தக் கேட்டே [சொல்
பொன்னிறத மேறியம்பு வில்லெடுத்தை வருஞ்சமர்க்குப்
போனா ரன்றே
நன்னயமே தன்சிரத்தி லொன்றுதுணித் திட்டசெயங்
கொண்டார் நாட்டிற்
சின்னப்பாம் பானாலும் பெரியகொம்பா லடியென்றே
செப்பு வாரே. (கஅ)

அச்சுதவாணன் கதை.

வேணியரா னைப்பணியு மச்சுதவா ணக்குரிசில்
வெள்ளாண் மைச்சீர்

ஆணியவல் லமைபான்மூ வேந்தரையுங் காவலில்வைத்
தவதி செய்தான்
பாணிமழு வணிசெயங்கொண் டாரேயெத் தொழில்களுக்கும்
பழுதுண் டேபார்
காணியைநட் டுக்களத்தி னிற்பதுவே நன்மையெனக்
கருது வாரே. (௩௯)

தக்கன் கதை.

கயிலைத்தா னுவைப்போலே மறுசிவனை யுண்டுபண்ணக்
கருதித் தக்கன்
செயலற்றே செய்வேள்வி யுங்குலைந்து வேற்றுமுகஞ்
சேர்ந்தா னன்றோ
* வயிலைப்போல் விழியுமைசேர் செயங்கொண்டா ரேயிந்த
வவனி மேலே
உயரத்தான் பறந்தாலு மூர்க்குருவி பருந்தாகா
துண்மை தானே. (௪0)

தக்கன்மகத்தில் வந்த தேவர்கள் கதை.

ஆணவத்தக் கன்மகத்தி லவியுணவந் திடுதேவ
ரவர்க ளெல்லா
நாணமொடு மானபங்க முற்றனரோ வீரபத்திர
நாத ராலே
† பாணிதனின் மழுவணிந்த செயங்கொண்டா ரேருசியும்
பசியும் பார்க்கு
மூணருந்தங் கருமமிழந் திடுவரென்ற பழமொழிதா
னுண்மை தானே. (௪௧)

இந்திரன் நளனைத் தூதுவிட்ட கதை.

வனத்திறையிந் திரனளன்பாற் சென்றுனக்கு வருமான
மாதைத் தானென்

* அயில் - வேல். † பாணி - கை.

றனக்குவரும் படிபேசித் தமயந்தி தனையிணக்கித்
தாவென் றுற்போற்
சினக்குமர வணிந்தடியார் மனக்கவலை தீர்த்தருளுஞ்
செயங்கொண் டாரே
உனக்குமழை பெய்யுமிப் போதெனக் கிரவை ஈர்தாவென்
றுரைத்த வாறே. (சஉ)

பிரமனைச் சிவன் சபித்த கதை.

கஞ்சனுக்குப் புவியிற்கோ யிலுட்பூசை யில்லையெனக்
கடிந்திர் மீட்டுங்
கெஞ்சினபின் மறையவர்செய் பூசையெல்லா முனக்கெனவே
கிருபை செய்தீர்
* பஞ்சவனுக் காய்மாறி நடித்தசெயங் கொண்டாரே
பகைவ னைத்தா
னஞ்சிநல்ல வார்த்தைசொன்னாற் பொல்லாப்பு வருவதில்லை
யவனி யோர்க்கே. (சங)

அகலிகை சாபந்தீர்ந்த கதை.

முனியகலி கையைபக்கல்லாச் சபித்துநிவிர்த் திக்கும்வழி
முறைசொன் னற்போன்
மனுவேந்த னுகியரி நடந்திடுந்தாட் பட்டபழைய
வடிவா னுளே
† தனவானைத் தோழனென்ற செயங்கொண்டா ரெயெவர்க்குந்
தலைநாள் செய்த
வனுபோகந் தொலைந்திடும்போ தவிழ்தமுஞ்சித் திக்குமென்ப
ரவனி யோரே. (சச)

விபீடணன் மகுடம்பெற்ற கதை.

வளமையுள்ள ராமனைவி பீஷணன்சேர்ந் திலங்கைமணி
மகுடம் பெற்றுன்

* பஞ்சவன் - பாண்டியன். † தனதான் - குபேரன்.

தளரரக்க ருடனிருந்தே யமர்க்குவந்தா லவனையொக்கச்
சரிப்பா ரன்றோ
களபமணி தனத்திசௌந் தரிபாகர் செயங்கொண்டார்
கனத்த நாட்டி
னிழலருமை வெய்யிலிற்போ னற்றெரியு மென்பதுவு
நிசங்கண் டீரே. (சரு)

அரிச்சந்திரன் கதை.

செப்புமரிச் சந்திரன்று னீசனுக்கே விலையாகிச்
சென்றே நெஞ்ச
மொப்பிமயா னமுங்காத்த நிமித்தியத்தா லிழுக்கவனுக்
கொருபோ துண்டோ
மைப்படியுங் கண்ணிசௌந் தரிபாகர் செயங்கொண்டார்
வளஞ்சேர் நாட்டிற்
குப்பையிலே கிடந்தாலுங் குன்றிமணி நிறத்திலொன் றுங்
குறைவு றுதே. (சசு)

அமராவதி யென்பவள் கதை.

வணக்கமுடன் சித்திரபுத் திரரையம ராவதிதான்
வணங்கிப் பொங்க
லிணக்கமுடன் செய்யாத நியமத்தா லவட்குமெத்த
விடரெய் திற்றே
யணைக்கடலின் மேனடந்த முகில்பணியுஞ் செயங்கொண்டா
ரருள்சேர் நாட்டிற்
கணக்கனுக்குக் கைக்கூலி கட்டியன்றோ குடியிருக்கக்
கடனென் பாரே. (சஎ)

விடத்திற்குப்பயந்த விஷ்ணு கதை.

கடியவிடம் பாற்கடலிற் றோன்றியபோ தருகிருந்த
காகுத் தன்று

னெடியபபத் துடனீங்கி யுங்கருநி றம்படைத்தா
னிசம தன்றோ [டார்
கொடியிடைப்பெண் சௌந்தரியா ளிடப்பாகர் செயங்கொண்
குலவு நாட்டிற்
படைதனக்கோ டிப்பிழைப்பார் பஞ்சமதற் கிருந்துபிழைப்
பாரென் பாரே. (௪௮)

பஞ்சதந்திரக் கதை.

திறமுளசஞ் சீவகனைத் தமாகன்கண் டழைத்துவந்து
சிங்கத் துக்கு
மிறையுளமந் திரியாக வைத்தபின்சிங் கந்தனக்கு
மிடபத் துக்குங் [டார்
குறைவில்பகை யுண்டுபண்ணி விட்டதன்றோ செயங்கொண்
குலவு நாட்டி
லுறவுதனைப் போலிருந்துங் குளவியைப்போற் கொட்டுவர்க
ளுண்டென் பாரே. (௪௯)

அறிவீன னரசன்மேற்பாடியகதை.

அறம்பெற்ற சோழனைமண் ணுண்ணிமரப் பாவையென்
றதிமேலோர் பாட்டாய் [ருள்
வெறும்பித்தன் சொல்லவந்த வேந்தர்சபை யோர்கள்பொ
விளங்கச் சொன்னார்
திறம்பெற்ற பரிசுகொண்டான் றென்னைம நகரில்வளர்
செயங்கொண் டாரே
யெறும்புக்குந் தன்கையா லெண்சாண்மெய் யென்றுலகோ
ரியம்பி னாரே. (௫௦)

கர்ணமகாராஜன் கிண்ணங்கொடுத்த கதை.

வாழிரவி சுதன்வலக்கை யாலெடுத்துக் கொடுக்குமுன்னே
மனம்வே றுமென்

றேழைமறை யோர்க்கிடக்கை யாலேயெண் ணெய்க்கிண்ண
மீந்தா னன்றோ
வாழிதனிற் பள்ளிகொள்ளு மால்பணியும் பொற்பாதச்
செயங்கொண் டாரே
நாளையென்பார் கொடைதனக்குச் சடுதியிலே யில்லை யென்ற
னலம் தாமே. (௫௧)

விசுவாமித்திரன் வெற்றியடையாத கதை.

புகழரிச்சந் திரனிசவா னெனவசிஷ்டர் சொலவவனைப்
பொய்ய னுக்க
மிகவெகுண்டு சபதமிட்டே யானமட்டும் பார்த்தயர்ந்து
விசுவா மித்ரன்
செகமறிய மக்கனப்பட் டிருந்ததையா வருமறிவார்
செயங்கொண் டாரே
முகடுமுட்ட வருகோபந் துரும்புகுத்த வேலையென
மொழிந்த வாறே. (௫௨)

சுப்பிரமணியர் கதை.

அண்ணலருள் சரவணவேள் புனக்குறப்பெண் வெயிலினிற்கு
மவதி பார்த்துத்
தண்ணுலவு வேங்கைமர நிழலாலன் றவள்வருத்தந்
தனைத்தீர்த் தாரே [தான்
விண்ணவர்க்காய் விடத்தையுண்ட செயங்கெண்டா ரேகனந்
விளங்கு நாட்டிற்
பெண்ணொன்றுற் பேயுமொக்க விரங்குமென வுலகுள்ளோர்
பேசு வாரே, (௫௩)

கிருட்டினன் ஐவரைக்காத்த கதை.

வள்ளல்கன்னன் கைநாகக் கணைப்புலன்மா லறிந்தவன்றன்
மாதா வைப்போய்ப்

பிள்ளைகண்மே ஞகமொரு தரம்விடப்பா னிறுத்தெனவும்
பேசச் சொல்லித்
தெள்ளியபஞ் சவருயிரைக் காத்தார்தென் னேமகர்ச்
செயங்கொண் டாரே
வெள்ளம்வரும் முன்னணைக் கோலிவைப்போர் காரியங்கண்
மிகநன் றாமே. (௫௪)

இரணியன் கதை.

ஆச்சரிய விரணியனட் டாக்கரத்தை யிகழ்ந்தார்போல்
லாப்பெண் ணுமற்
கூச்சமறத் தள்ளியிர ணிபநமா வென்றதினூற்
குலைந்தான் றேகம்
பேச்சிமுலை யுண்டமுகில் பணிசெயங்கொண் டாரே நீர்
பெருகாற் றுக்கு
ணிச்சறியா மைந்தனைவெள் ளங்கொண்டு போமென்ற
னிசங்கண் டீரே. (௫௫)

உருக்குமாங்கதன் கதை.

நன்னிலத்தி லுருக்குமாங் கதராச னேருவிரத
நடாத்தி னனென்
றந்நகரு மவ்விரதந் தொடங்கியதால் யமனவரை
யணுகக் கூடா
தென்னயம தண்டனைசே ராதிருந்தார் செயங்கொண்டா
ரிலகு நாட்டின்
மன்னவனெப் படியோமன் னுயிருமந்தப் படியெனவும்
வழுத்து வாரே. (௫௬)

நளன் கதை.

அடவிசென்று நகரிழந்து வறுமைதங்கி யுடன்மெலிந்தே
யம்மா னூர்வந்

திடவுமம்மா னேவலினு லமைச்சரழைத் திடவருவ
திலேபோ வென்று
திடநளனை மாமனெதிர் கொண்டழைக்கச் சம்மதித்தான்
செயங்கொண் டாரே
கடுகுசிறுத் தாலுமென்ன காரம்போ காதெனவுங்
கழறு வாரே. (நுஎ)

சூரபத்மன்.

பூதலமும் பொன்னுலகு மேவல்கொண்ட சூரனரன்
புதல்வற் கஞ்சிச்
* சூதமா மாயொளித்துக் கடைசியிற்செவ் வேள்கரத்திற்
றுசமா னனே
தாதவிழ்பூங் கொன்றையணி செயங்கொண்டா ரேசெடியைத்
தாண்டித் தாவிக்
காதமோ டினுமுயற்குக் கைத்தூக்கென் றுலகிலுள்ளோர்
கழறு வாரே. (நுஅ)

பொய்த்தவ வொழுக்கத்தோர் கதை.

பூமிதனிற் சிலர்நீறிட் டிருகாமுங் குவித்திருகண்
பொத்திக் கொண்டே
காமியர்கண் மேற்பொருண்மேன் மனங்கிடக்க வாயிலா
காவென் றுற்போ
னேமியணி வோன்றேட வரியபதச் செயங்கொண்டார்
நிமலர் நாட்டின்
மாமிதலை மேற்கையிடம் வேலிபுறத் தினிற்கண்ணும்
வைத்த வாறே. (நுகூ)

திருவிளையாடற் புராணக் கதை.

பெண்ணிறக்கத் தொங்கலம்பால் வில்வேட னடுத்துவாப்
பெண்ணுக் காளன்

---

* சூதம் - மாமரம்.

கொன்றதுநீ யென்றிழுக்க மதுரையிற்சுந் தார்நியாயங்
கொடுத்துத் தீர்த்தா
ரண்ணலரா னேசெயங்கொண் டாரேகா தாரக்கேட்
டதும்பொய் யாகுங்
கண்ணாரக் கண்டதும்பொய் தீர்க்கவிசா ரிப்பதுமெய்
காணுந் தானே. (௬0)

துரியோதன னரசிழந்த கதை.

கூறுமர வக்கொடியோன் பாண்டவருக் கைந்நிலமுங்
கொடுக்கே னென்று
வீறுசொன்னான் சுடக்கொடுத்த பின்னுயிரோ டுலகமுற்றும்
விட்டா னன்றோ
நீறணிமெய்ச் செயங்கொண்டா ரேயாற்றோ டேமூடர்
நேர்போ னாலும்
* போறதல்லா லோடக்கா ரனுக்கரைக்கா சுங்கொடுக்கப்
பொருந்தி டாவே. (௬௧)

விநாயகர் மாங்கனி பெற்ற கதை.

வேய்க்குமகன் மூத்தபிள்ளை காத்தினின்மாங் கனிகொடுக்க
வெகுண்டு வேலர்
வாய்க்கினிய கனிநமக்குத் தாவிலென்று கோபமுடன்
மலைமேற் சென்றார்
பாக்கியஞ்செந் தமிழ்க்குதவுஞ் செயங்கொண்டா ரேவிரைத்த
பழனந் தோறுந்
தாய்க்குவிளைந் தானுமென்ன தனக்குவிளைந் திடவேண்டித்
தவஞ்செய் வாரே. (௬௨)

சீவகன் கதை.

பெலமுற்ற சிங்கமொரு கன்றீனும் படியெழுதிப்
பின்னே செம்பொன்

---

* போகிறதல்லா லென்பது போறதல்லாலென விகாரமாயது.

விலைபெற்ற கரியையரிக் கன்றுதுள்ளிப் பாய்ந்தகதை
மெய்யா மென்றே
சிலைபெற்ற கூளேந்த்ரன் விறலிதனில் விளங்குதன்றோ
செயங்கொண் டாரே
குலவித்தை கல்லாமற் பாதிவரு மென்றுலகோர்
கூறு வாரே. (கூ௩)

கொக்கு மீன்களை மடித்துத் தானும்மடிந்த கதை.

தண்ணார்மீன் களைச்சருவ சிவதாய பா* பகர்ந்தான்
றயவாய்ப் பேசி
யெண்ணமற் சிதைத்தபழி தனக் † கலவன் பகக்கழுத்தை
யிடறிற் றன்றே
பண்ணார்சிந் தாமணியில் விழுந்ததன்றோ செயங்கொண்டார்
பரவு நாட்டிற்
கொன்றாரைக் கொல்லுமல்லாற் கொலைவிடா தென்றுலகோர்
கூறு வாரே. (கூச)

வாமனவதாரக் கதை.

உலகமெல்லா முடல்சிறுத்துஞ் சிறியவா மனனளந்தா
னொருபா தத்தா
லலகையின்காத் திரங்கிளென்ன வாலகிருஷ்ணன் பாலருந்தி
யவளை மாய்த்தான்
சிலைநுதலாள் சௌந்தரிநா யகியையிடப் பாகம்வைத்த
செயங்கொண் டாரே
மலைபெரிதா னாலுமென்ன சிற்றுளிக்குப் பயஞ்சனிக்கும்
வண்மை தானே. (கூரு)

புட்கரன் நளனை வரவழைத்த கதை.

காவலன்புட் கரனளனைச் சூதாட வரவழைத்த
கபடங் கண்டே

---

* பகம் - கொக்கு. † அலவன் - நண்டு.

மேவியகூ தாடாமற் றள்ளிவிட்டாற் சனிநளனை
வினைசெய் வானோ
வாவிதிகழ் தென்னைமச் செயங்கொண்டா ரேமிகுந்த
வளஞ்சேர் நாட்டி
னாவிதன்செய் தினையறிந்து குடுமியைப்பத் திரப்படுத்த
னலமென் பாரே. (௬௬)

குமுண ராசன் கதை.

சிம்மாச னன்குமுணன் சிரம்போலே விழிமூக்குச்
செவிவாய் செய்து
சம்மாரம் பண்ணிரத்தச் சோரிசிந்தக் கொடுத்ததுவுந்
தட்டா னன்றோ
பெம்மானே தென்னைமச் செயங்கொண்டா ரேமலையைப்
பிரட்டுங் கையான்
கம்மாளன் பசுவைத்தான் காதறுத்துக் கொள்ளுமெனக்
கழறு வாரே. (௬௭)

ஆமை வாயாற் கெட்ட கதை.

கொடியையிரண் * டோதிமங்கெள விப்பறக்க நடுக் ‡ கூர்மங்
குலவிச் செல்கா
னெடியிலொரு செப்திசொல வாய்திறந்தா மையும்விழுந்து
நொறுங்கிற் றன்றே
வடிவுளதந் திரக்கதையு முண்டுசெயங் கொண்டார்வாழ்
வளஞ்சேர் நாட்டி
னெடுங்கிணறும் வாயாலே தூறுமென்றே சொல்லுவர்க
ணிசங்கண் டீரே. (௬௮)

திரிசங்கு ராசன் கதை.

நம்புகுரு வசிஷ்டர்பகை மிகுந்திருக்கும் போதுதிரிச்
சங்கு ராசன்

---

* ஓதிமம் - அன்னம். ‡ கூர்மம் - ஆமை.

வம்புரைத்த கோசிகபாற் சொர்க்கமதி லேறியதான்
மகிமை யுண்டோ
சம்புமகா தேவசெயங் கொண்டாரே யெதிராளி
தனுவா லெய்த
வம்புவிழக் கையிலிழை கட்டினுன் மெய்யினிற்புண்
ணுறி டாதே. (௬௯)

சுக்கிரன் கண்ணிழந்த கதை.

கூச்சமற மாவலிபூ மியைக்கொடுக்க மால்வாங்கக்
குறுக்கே சுக்ரன்
பேச்சறியா மற்பேசிக் கண்ணிழப்பா னேனுதுங்கிப்
பிழைக்கொண் ணுதோ
வாச்சரியஞ் செயங்கொண்டா ரேயிலங்கா புரிராம
ராண்டா லென்ன
வேச்சிலரக் கர்களாண்டா லென்னென்று குரங்கநா
ளிருந்த தன்றே. (௭௦)

மானமுள்ள மகாபுருடன் கதை.

நீரெடுத்தோர் கலசமதிற் கவசமுஞ்செய் தொருவன்வந்தா
னெடுநாள் கும்பம்
பாரில்விழுந் துடையவின்னு மொருகலச மென்மானும்
பார்க்கும் போது
சீரலவென் றழுதானென் றொருகதைசொல் வார்நேமச்
செயங்கொண் டாரே
யாரெனினு மானமிழந் துயிர்காப்ப தென்னவென்பா
ரவனி யோரே. (௭௧)

கருடன் கதை.

விருப்பமறை யோன்றனக்குப் பிறந்தகிரு தனை * யுவணன்
விழுங்கும் வாயி

* உவணன் - கருடன்.

னெருப்பெழச்சுட் டதனுற்செங் கருடனிரு தனைவிடுத்தா
னெனவோர் பாட்டிற்
றிருப்பதிவேங் கடசதகந் தனிலுரைத்தார் முன்பெரியோர்
செயங்கொண் டாரே
நெருப்பிருப்ப தறியாமற் றொட்டாலுஞ் சுடுமெனவே
நிகழ்த்து வாரே. (எஉ)

பட்டணத்துப் பிள்ளை கதை.

கையினிற்பட் டணத்தார்க்குத் தமக்கைநஞ்சு கலந்துபல
காரஞ் செய்தே
யையமுறக் கொல்லவென்றே கொடுக்கவவண் மனைநெருப்பா
லழிந்த தன்றோ
துய்ய * பினு கச்சிலையீர் செயங்கொண்டா ரேபிறர்க்குத்
துன்பங் காணச்
செய்ததீ வினைதா னுஞ் செய்தவர்க்கே சேருமெனச்
செப்பு வாரே. (எங)

விக்ரமாதித்தன் கதை.

சிந்தைமகிழ் விக்ரமா தித்தனுக்கா யிரவருடந்
தேவி யீந்தாள்
புந்திவளு மந்திரிசொல் லாவிரண்டா யிரவருடம்
புவியை யாண்டான்
சுந்தரர்க்குத் தூதுசென்ற செயங்கொண்டா ரேதருமந்
துலங்கு நாட்டின்
மந்திரங்கால் மதிமுக்கா லென்றுலகந் தனிலுள்ளோர்
வழுத்து வாரே. (எச)

காளிதாசன் கதை.

நிசகாளி தாசனரண் மனைவாயிற் புகவேண்டி
நிருபன் கீர்த்தி

* பினகம் - சூலம், அல்லது சிவன் வில்.

சுகநாசி பல்போலென் றுரைத்ததனாற் செல்லவிட்டார்
தோன்றப் போமிவன்
றிசைவாங்கிர் வானம்போ சன்றன்மேற் பகர்ந்தனன்காண்
செயங்கொண் டாரே
பசுமாட்டுத் தோலதனைப் புலிபோர்த்துக் கொண்டிருந்த
பண்பு தானே. (எரு)

இராவணன் போர்க்குத் துணிந்த கதை.

யாகத்தாற் செயமுமில்லை யிறப்பதினி நிசமெனக்கொ
ளன்னைப் பெண்ணே
லோகத்தா ரிராமனென வுரைக்குமட்டு மிராவணனென்
றுரைப்பார் போர்க்குப்
போகத்தான் றுணிந்தனென்று னரக்கனதாற் செயங்கொண்
பொருந்து நாட்டிற் [டார்
சாகத்தான் றுணிந்தவர்க்குச் சமுத்ரமுழங் காலளவு
தானென் பாரே. (எசு)

நக்கீரர் கதை.

அத்தனீ காத்தெழுதி யடிமைக்கீந் திட்டசெய்யு
ளதனை நோக்கிச்
சற்றுந்தா மதியாம லியற்கைமணங் கூந்தலுக்குத்
தகுதி யென்றல்
குற்றமெனப் பயமின்றி யுரைத்தனர்நக் கீரர்செயங்
கொண்டா ரேசொல்
வித்துவான் மதயானை யிரண்டுமொப்பென் றுரைப்பதுவு
மெய்ய தாமே. (எஎ)

துரோணர் பெண்சாதி கதை.

உச்சிதமாய்த் துரோணர்சொன்ன மொழிப்படியே யவர்மனை
ளுடையில் லாமற் [யா

பிச்சையிடக் கொள்சிவனுக் கக்கணமே யிந்திரியம்
பிறந்த தன்றோ
தெட்சணமா முனிபாவுந் தென்னேம நகரில்வளர்
செயங்கொண் டாரே
யிச்சையுள்ள காமுகர்க்குக் கண்கண்ட விடத்தினிலென்
றியம்பு வாரே. (எஅ)

வாதாபி கதை.

மெத்தநாள் வாதாபி வேதியர்க ளுயிரையுண்டு
மேவிக் கும்ப
சித்தனைச்சாப் பிடநினைந்தான் சித்தனவ னுயிரைமுற்றுஞ்
சிதைத்துப் போட்டான்
மத்தகசந் தனையுரித்த செயங்கொண்டா ரேயார்க்கு
மனதுக் கேற்க
நித்தியங்கட் டப்பாலை முற்றவுந்தான் பழுத்திடுமோ
நிலத்து மீதே. (எகூ)

நாரை மூக்குக் குவமை சொல்லிய கதை.

பார்புகழும் பாண்டியர்க்குச் சங்கத்தார் பேரறிவாற்
பகர வொண்ணு
நாரைமூக் குக்குவமை பனங்கிழங்சென் றொருபுலவ
னவின்று னன்றோ
சீருலவுங் கங்கைதிங்க ளரவமொடு கொன்றையணி
செயங்கொண் டாரே
காருலவும் புவியிலுள்ளோ ராகாயந் தனையும்வரை
கட்டு வாரே. (அ0)

விறன்மிண்டநாயனுர் கதை.

ஆரூரெல் லையின்மிதியே னென்றவிறன் மிண்டர்தனை
யரன்சோ தித்தப்

பாரிலொரு காண்பித்திக்கச் செய்ததுகண் டக்காலைப்
பதறி யீர்த்த
சிருவந்து சிவன்காட்சி கொடுத்தானன் றேநேமச்
செயங்கொண் டாரே
பேருலகின் மனங்கலங்கிப் பிரியாமற் பிடித்தவர்க்குப்
பேறுண் டாமே. (அக)

செங்நாப்புலவர் கதை.

உற்றசெங்நாப் புலவர்மிக்க கணிகணன்மேற் கோபமதா
யுலகுண் டோனை
யிற்றையாம் புறப்படுவோ மினியுன்பாய் சுருட்டியெழுந்
திருமென் றேதச்
சித்தசன்றன் றுதைவா தப்பெருமா ளெழுந்தனரே
செயங்கொண் டாரே
பத்தருளத் தினிலீசன் குடியிருப்பா னெனச்சொல்லும்
பண்பு தானே. (அஉ)

குசலன் கதை.

மிகப்பெரிய மாலசுவன் றனைப்பிடித்துக் கட்டிவந்த
வினைப்போர் தன்னைப்
பகற்பொழுதிற் பொடியாக்கித் தாதைதனை வென்றகுசன்
பண்பு பாரீர்
செகத்தரசர் புகழவருந் தென்னேம நாடதிபச்
செயங்கொண் டாரே
தகப்பனொரு பாக்கெனவும் பிள்ளையொரு தோப்பெனவுஞ்
சாற்று வாரே. (அங)

இரேணுகாதேவி கதை.

தண்பரசு ராமனது தாயுடலிற் பறைச்சிதலை
தரித்த மின்னு

ணம்பரிடங் கொண்டுவா விவண்முழுதும் பறைச்சியென
நகைத்து நாதன்
றிண்புயனே யிவளையப்பாற் றாந்தெனச்சேய்க் குரைத்தனரே
செயங்கொண் டாரே
பண்புளவெண் சாணுடம்பிற் சிரசுபிர தானமெனப்
பகரு வாரே. (அச)

கண்ணன் கதை.

பார்த்தனுக்கே ரதமூர்ந்தோன் மூத்தபல பத்திரனைப்
பாரைச் சுற்றென்
றேய்த்தனுப்பித் தன்னைச்சார்ந் தோரைரட்சித் தண்ணனைச்
திருந்து வாழ்ந்த [சார்ந்
நூற்றுவரை மடியவுஞ்செய் தான்செயங்கொண் டாரேநீர்
நுவலக் கேண்மோ
மூத்ததுவே மோழையென்று மிளையதுவே காளையென்று
மொழிகு வாரே. (அரு)

நிரம்பவழகியர் கதை.

பொன்னார்செல் வழுந்தமிழும் பொருந்தரசன் றருக்கதனாற்
புலவ ருக்குண்
மன்னான நிரம்பவழ கியரையண்டங் காக்கையென
வழுத்தக் கேட்டே
யன்னார்நீ யேயண்டங் காக்கையென்றார் செயங்கொண்டா
ரணிகொ ணாட்டிற்
றன்னாலே தான்மெலிந்தா லண்ணாவி யென்னசெய்வான்
றாணி மீதே. (அசு)

நந்திராசன் கதை.

சூத்திரப்பா வையைநிகர்மெய் யிதனைநம்பொண் ணாதென்வுந்
துணைவன் கல்விக்

காத்துமதத் தஞ்செய்துல குள்ளமட்டும் புகழ்படைத்தா
னன்றோ நந்தி
போற்றியசுந் தரர்க்காய்முன் மறிகாட்டுஞ் செயங்கொண்டார்
புனித நாட்டிற்
கீர்த்தியப கீர்த்தியிவை வந்தாற்போ காவெனவே
கிளத்து வாரே. (அஎ)

சுவாகாள் கதை.

ஆறுரிஷி பத்தினிமார் பழுதுபடா திருக்கையிலே
யன்னோர் ரூபங்
கூறுசுவா காளெடுத்தக் கினிதேவைத் தழுவரிஷிக்
கூட்டங் கூடிச்
சீறியறு வரைத்துரத்தத் தவசுக்கே கினரன்றோ
செயங்கொண் டாரே
* வாறவிதி வந்ததென்றால் வளைந்தாடும் பானையென்று
வழுத்து வாரே. (அஅ)

அருந்ததி கதை.

நித்தியசந் யாசியென்று நித்யோப வாசியென்றும்
ரிஷிகள் கூற
வத்தைமெய்யென் றருந்ததியாள் கங்கைதனக் குரைத்துவழி
யன்பாய்க் கேட்கச்
சித்தமகி ழருந்ததிசொற் றனக்குவழி கங்கைவிட்டாள்
செயங்கொண் டாரே
பத்தினியுந் தமிவாக்குப் பலிக்குமெனத் தேவரொக்கப்
பணித்திட் டாரே. (அகூ)

மிருகண்டர் கதை.

மதிமெதுவா லொருநூறு வியன்மதியாற் பதினாறு
வயது புத்ர

* வாற - என்பது வருகிற என்பதன் விகாரம்.

னெதுதருவோ மெனச்சிவனே நல்லபிள்ளை வயதிரெட்
டிருந்தாற் போது
மதுதருவி ரென்றுமிரு கண்டுமுனி யன்றுரைத்தார்
செயங்கொண் டாரே
யிதசாணி யொருகூடை மிக்கசவ்வா தோர்பணத்தி
னிடையென் பாரே. (௬0)

அனுமான் கதை.

சலியாமற் கடருண்டி மருத்துமலை கொணரனுமான்
றடங்கோ டன்னை
நலியாம லிந்த்ரசித்தன் பாசத்தாற் கட்டிவிட்டா
னலம தான
கலியாண முரசொலிக்குந் தென்னேமச் செயங்கொண்டார்
கனத்த நாட்டில்
வலியார்க்கு வலியாரு மிருப்பரென்றே யுலகிலுள்ளோர்
வசனிப் பாரே. (௬௧)

பாண்டியராசன் கதை.

மதுரைமன்ன னிடத்திருந்த குதிரைபற்று தெனவிலைக்கு
மாவ னேக
மிதமுடன்சே கரித்தநிமித் தியத்தான்முன் பரிமுழுது
மிழந்தா னன்றோ
நிதியனைத்தோ முமைவேண்டுஞ் செயங்கொண்டா ரேயேரி
நிறைக்க வேண்டிப் [த்துப்
புதியவெள்ளம் வரப்போய்முன் னிருந்தவெள்ளத் தையுமிழு
போன வாறே. (௬௨)

விறகுதலையன் மனையாள் கதை.

* தெகிட்டாக்கா தலைவிறகு தலையன்மனை யாள்கூத்தன்
றிகிலிட் டேங்கப்

* தெகிட்டா - தெவிட்டாத.

புகட்டியல்லோ கற்பழியா மற்கவிகேட் டாடனது
புருடன் பேரின்
முகட்டாலி லையிற்றுயில்வோன் பணிசெயங்கொண் டாரேசீர்
முதிர்ந்த நாட்டிற்
பகட்டாற்பங் கெடுப்பரெனப் பொரியரிசி யிடியெனவும்
பகரு வாரே. (கூ௩)

சூரியனைச் சக்கரத்தால் மறைத்த கதை.

வாணிமா துலன்றேழ னிறவாமற் காக்கவென்ன
வகைசெய் வோமென்
றுணியிர வியைத்திகிரி யான்மறைத்துப் பார்த்தனைக்காத்
தருளி னாரே
நாணரவாற் பொன்மலையை வளைத்தசெயங் கொண்டார்வாழ்]
நலஞ்சேர் நாட்டில்
* வேணுமென்று நூற்றுன்மேல் வியநூலாய் நூற்றிடுவர்
மெய்ய தாமே. (கூ௪)

மயிலிராவணன் கதை.

அச்சமில்லாத் துராக்கதரா வணனைமயி லிராவணன்சேர்ந்
தழிந்து போனான்
பட்சமுள்ள விபீஷணன்று னரக்கனைவிட் டொதுங்கிமிகப்
பண்பாய் வாழ்ந்தான்
கச்சணியுந் தனத்திசௌந் தரிபாகர் செயங்கொண்டார்.
கனத்த நாட்டிற்
றுர்ச்சனரைக் கண்டவுடன் றூரப்போ வென்றுலகோர்
சொல்லு வாரே. (கூ௫)

வரகுணசோழன் மனையாள் கதை.

வல்லவர குணசோழன் மகளைமணஞ் செய்தருளி
வடிவைப் பார்த்தே

---

* வேணும் - வேண்டுமென்பதன் விகாரம்.

யல்லிருக்குங் குழலியிவண் மருதப்பர்க் காவணமக்
கன்னே யென்றே
தில்லைமன்று ளாடிமெய்யி லேகியமாம் படிசேர்த்தான்
செயங்கொண் டாரே
நல்லதுகண் டானுபன் றனக்கென்றே யுலகிலுள்ளோர்
நவிலு வாரே. (கசு)

நக்கீரர் கதை.

அரசிலையிற் பாதிபட்சி பாதிமச்ச மானவிந்தை
யனைத்தும் பார்த்து
விரவுளநிட் டையைமறந்த நக்கீரர் தமைப்பூதம்
விழுங்கத் தூக்கித்
திரண்மலையி லடைக்கவள்ளி கணவனன்றோ விலக்கிவிட்டான்
செயங்கொண் டாரே
யுரைசெய்தவ மறந்தாற்கை தவமாகு மென்றெளவை
யுரைத்த வாறே. (கஎ)

வேடன் கதை.

அடவியில்வே தியர்க்கொருவே டன்றினமாப் பகுந்தபல
ஞற்கா சிக்குத்
திடமுளமன் னவன்சேயாத் தினையரியப் பொற்கலத்திற்
சென்த்தா னன்றோ
வடவரையைச் சிலையாக வளைத்தசெயங் கொண்டாரே
வையந் தன்னி
லிடுவதுபிச் சைபின்பு பெறுவதுவே மோட்சமென
வியம்பு வாரே. (கஅ)

துர்வாசமுனி கதை.

வாய்ச்சுதெனத் துர்வாச ருக்குமாங் கதனைமெத்த
வருத்த வாழி

...லினுன் முனியைவெல்ல வரவுருக்கு மாங்கதன்ருன்
பரித்தா னன்ருே
...ச்சமறச் சிலந்திப்பூச் சியைக்கதிரேர்த் திட்டசெயங்
கொண்டார் நாட்டிற்
சாட்சிக்கா ரணைப்பணியார் சண்டைக்கா ரணைப்பணியத்
தகுமென் பாரே. (கூகூ)

வரரிஷி கதை.

சிவயோகர் வெகுளியினுல் வரரிஷியு * மகிடமெனச்
செனித்தான் பாரிற்
பவமடியாற் கற்றவுமை லிங்கப்ரா ணியைவதைத்த
பழியின் ருேஷ [டார்
நவதீர்த்த மாடியன்ருே தொலேந்ததென்பார் செயங்கொண்
நலஞ்சேர் நாட்டிற்
றவமுடையோர் மனமழுங்கச் செயப்படா தென்றுலகோர்
சாற்று வாரே. (க00)

ஜெயங்கொண்டார் சதகம்

முற்றிற்று.

* மகிடம் - எருமை.